DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 328/2024

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சதீஷ் |
| Father / Husband Name | சேகர் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **12.11.2024**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தண்டலம் கிராமத்தில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். தேதி மாதம் ஞாபகம் இல்லை. கடந்த 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 4.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி வீட்டில் அவருக்கும் அவரது அப்பாவுக்கும் சண்டை நடந்து கொண்டிருந்தது. நான் விளக்கி விட போகும்போது கையில் இருந்த கண்ணாடி துண்டு எனது முகத்தில் பட்டுவிட்டது. பின்னர் ஸ்டேன்லி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**(அரசு தரப்பில் சாட்சி பகுதியாக பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்ற சூர்யா எனது நண்பர் ஆவார். கடந்த 02.04.2024 ம் தேதி மாலை 4.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தேன் என்றால் ஆமாம். ஆஜர் எதிரி நான் வீட்டில் வந்து அசிங்கமாக பேசினாரா என்றால் இல்லை. அப்போது ஆஜர் எதிரி என் மீது பீர் பாட்டிலால் குத்த வந்தாரா என்றால் இல்லை. மேற்படி பாட்டிலை வைத்து என் கண்ணத்தில் காயம் ஏற்பட்டது என்றால் ஆமாம். விலக்கி விட சென்றபோது காயம் ஏற்பட்டது. அந்த காயத்திற்காக 20 நாட்கள் சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். மேற்கண்ட விவரங்களை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை இல்லை.**